இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 10-09-2024

# 14 ஆவது இடம் பழனிசாமி!

அமெரிக்கப் பயணத்தில் அதிகப்படியான தொழில் முதலீடுகளை ஈர்த்துக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத எடப்பாடி பழனிசாமி அதனைக் கொச்சைப்படுத்தும் வகையில் தினந்தோறும் ஏதேதோ புலம்பிக் கொண்டிருக்கிறார்.

**தான் ஆட்சியில் இருந்தபோது அனைத்துத் துறைகளையும் தரைமட்டத்துக்கு தாழ்த்தியவர் தான் பழனிசாமி. அதுவும் தொழில் துறையானது தரை மட்டத்தை விட, அடிமட்டத்துக்கு தாழ்ந்தது.**

**2020 செப்டம்பர் மாதம் அவர் முதலமைச்சராக இருந்தபோது என்ன நிலைமை தெரியுமா?**

மாநில தொழில் சீர்திருத்த செயல் திட்டம் - 2029 அடிப்படையில் எளிதாக தொழில் நடத்துவதற்கான சூழலை மேம்படுத்தும் மாநிலங்களின் தரவரிசைப் பட்டியலை ஒன்றிய அரசு, 2020 ஆம் ஆண்டு வெளியிட்டது. இதில் பதினான்காவது இடத்தில் இருந்தது எடப்பாடி பழனிசாமியின் ஆட்சி!

ஆந்திரா, உத்தரப்பிரதேசம், தெலுங்கானா, மத்தியபிரதேசம், ஜார்கண்ட், சத்தீஸ்கர், இமாசலபிரதேசம், ராஜஸ்தான்,மேற்குவங்காளம், குஜராத், உத்ரகாண்ட், டெல்லி, மகாராஷ்டிரா... ஆகிய மாநிலங்களைத் தாண்டி பழனிசாமி காலத் தமிழ்நாடு இருந்தது. ஒன்றிய அரசு வெளியிட்ட பட்டியல் தான் இது. எளிதாக தொழில்நடத்துவதற்கான சூழலை மேம்படுத்தும் மாநிலங்களின் பட்டியல் இது. பதினான்காவது இடத்தில் இருக்கும் பழனிசாமி காலத்தில் தொழில் தொடங்க யார் வருவார்கள்? யார் வந்தார்கள்?

**இந்தப் புள்ளிவிபரங்களை வெளியிட்டவர் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். தொழில் வர்த்தக அமைச்சர் பியூஸ் கோயல், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி ஆகியோர் முன்னிலையில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராம் வெளியிட்ட அறிக்கை இது. இப்படி ஒரு பட்டியல் 2018 ஆம் ஆண்டும் வெளியானது. அப்போது 15 ஆவது இடத்தில் இருந்தார் பழனிசாமி. இந்த பழனிசாமிக்கு இன்றைய முதலமைச்சரைப் பற்றிப் பேச அருகதை இருக்கிறதா?**

2019 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த பழனிசாமி இங்கிலாந்து,அமெரிக்கா, துபாய் போனார். ரூ.8800 கோடிக்கு ஒப்பந்தம் போட்டிருப்பதாகச் சொன்னார். அதில் எத்தனை திட்டத்தை தமிழ்நாட்டில் தொடங்கி வைத்தார் என்பதை அவரால் சொல்ல முடியுமா? அவசர ஆம்புலன்ஸ் சேவையைப் பார்த்தார். கொசுக்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையைப் பார்வையிட்டார். கிங்க்ஸ் கல்லூரி மருத்துவமனையைப் பார்வையிட்டார். கால்நடைப் பண்ணையைப் பார்த்தார். 13 நாட்கள் சுற்றுப்பயணம் செய்தார். “இங்கிலாந்தில் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. மருத்துவப் பணியாளர்களின் பணித் திறன் மேம்பட ஒரு ஒப்பந்தம், கிங்க்ஸ் மருத்துவமனையை தமிழகத்தில் துவங்க ஒரு ஒப்பந்தம், டெங்கு கொசுக்களைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்த ஒப்பந்தம் ஆகியவை செய்யப்பட்டன” என்றார். அது குறித்து விளக்கம் அளிக்க பழனிசாமி தயாரா?

**இவர் மட்டுமா போனார்? துணை முதலமைச்சர் பன்னீர்செல்வமும் சென்றார். விஜயபாஸ்கர், எம்.சி.சம்பத், ராஜேந்திரபாலாஜி ஆகிய அமைச்சர்கள் பலரும் சென்றார்கள். ஆனால் தமிழ்நாட்டுக்கு முதலீடு வந்ததா? இல்லை. பழனிசாமி காலத்தில் முதலீடுகள் குறைந்தது என்பதுதான் உண்மை.**

2020 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கி வெளியிட்ட புள்ளிவிபத்தின்படி பழனிசாமி காலத்தில் முதலீடுகள் குறைந்தது. 2015-16 நிதியாண்டில் ரூ. 29,781 கோடி முதலீடு கிடைத்துள்ளது. அடுத்த நிதியாண்டில் ரூ.14,830 கோடியும் 2017-18ம் ஆண்டு ரூ.22,354 கோடியும் 2018-19ம் ஆண்டில் ரூ.18,164 கோடியும் வெளிநாட்டு நிதி கிடைத்துள்ளது. பழனிசாமி, பன்னீர்செல்வம், அ.தி.மு.க. அமைச்சர்களின் வெளிநாட்டு சுற்றுப்பயணத்துக்குப் பிறகு, வெளிநாட்டு முதலீடு மேலும் குறைந்து போனது என்பதுதான் உண்மை. அதாவது 2019-20ம் ஆண்டில் ரூ.13,135 கோடி மட்டுமே நிதி கிடைத்துள்ளது. **முந்தைய 5 ஆண்டுகளில் மிகக் குறைந்த வெளிநாட்டு முதலீடு தமிழகத்துக்கு கிடைத்திருப்பது அந்த ஆண்டில்தான். இதுதான் பழனிசாமியின் சாதனை மகுடம் ஆகும்.**

பழனிசாமி ஆட்சியில் தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய பல்வேறு திட்டங்கள், மற்ற மாநிலங்களுக்குப் போனது. அதற்கு உண்மையான காரணம் என்ன என்பது பழனிசாமியின் மனச்சாட்சிக்குத் தெரியும்.

ஆனால் இந்த மூன்றாண்டு காலத்தில் ரூ.10 லட்சம் கோடிக்கான முதலீடுகளை தி.மு.க. அரசு ஈர்த்துள்ளது. இவை செயல்பாட்டுக்கு வரும்போது 31 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். கடந்த மூன்று ஆண்டு காலத்தில் கையெழுத்தான அனைத்து ஒப்பந்தங்களும் எந்த நிலைமையில் இருக்கின்றன, எத்தனை செயல்பாட்டுக்கு வந்துள்ளன, மற்றவை எப்போது செயல்பாட்டுக்கு வரும் என்பது குறித்து தெளிவாக அரசின் சார்பில் சொல்லப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அரசு நிகழ்ச்சிகளிலும், பேட்டிகளிலும் இதனை தெளிவுபடுத்தி இருக்கிறார். ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் அந்நிய முதலீடு குறைந்த போதிலும் தமிழ்நாட்டுக்கான முதலீடு 12.3 விழுக்காடு அதிகம் ஆகி உள்ளது. இதனை பழனிசாமி உணர வேண்டும். இதையெல்லாம் உள்வாங்கிக் கொள்ளும் திறம் இல்லாததால் தான் புலம்பி வருகிறார்.

**தொழில் தொடங்க வாய்ப்புள்ள மாநிலங்களின் பட்டியலில் 14 ஆவது இடத்தில் இருந்த பழனிசாமி காலத் தமிழ்நாட்டை மூன்றாவது இடத்துக்கு நகர்த்திக் கொண்டு வந்திருப்பதுதான் மாண்புமிகு முதலமைச்சரின் மகத்தான சாதனை ஆகும்.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 7.9.2024 அன்று அமெரிக்கா நாட்டின் சிகாகோவில், சிகாகோ தமிழ் கூட்டமைப்பு மற்றும் சிகாகோ தமிழ்ச் சங்கங்களின் சார்பில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

## ‘ஆனந்தக் கொண்டாட்டம் - 2024’

# சிங்கப்பூரில் ‘சென்னை சங்கமம்’ நிகழ்ச்சி!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று சிறப்புரை!



கோலாலம்பூர், செப்.10-

செழுமையான மரபுடைய தமிழர் மண்ணிசைக் கலைகளின் மறுமலர்ச்சியாக உருவெடுத்தது, கடந்த ஆகஸ்ட் 30, 31ஆம் தேதிகளில் சிங்கப்பூரில் மெரினா கடல்குடா வட்டாரத்தில் கடலோரத்தில் அமைந்த எஸ்பிளனேட் அரங்கில் மேடையேறிய ‘ஆனந்த கொண்டாட்டம் 2024’. சிங்கப்பூரின் ஆனந்தா மரபுக் கலைகள் கூடம் (ஆட்டம்), சிங்கப்பூ அரசு நிறுவனமான இந்திய மரபுடைமை நிலையம், மேலும் சிங்கப்பூரைச் சேர்ந்த பல்வேறு உள்ளூர், வெளியூர் கலை அமைப்புகள் ஆகியவை இணைந்து படைத்த இக்கலை விருந்து, பல்வேறு தமிழக நாட்டுப்புறக் கலைஞர்கள், உள்ளூர்க் கலைஞர்கள், தன்னார்வலர்கள் என 200க்கும் மேற்பட்ட கலைஞர்களை ஒருங்கிணைத்தது.

தமிழ்நாட்டின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சகத்தின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை இந்த நிகழ்வுக்கு, தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூர் செல்ல 18 கலைஞர்கள் நிதி உதவி வழங்கி, சிங்கப்பூருக்கு அனுப்பி அதரவளித்திருப்பது குறிப்பிடத் தக்கது. துடும்பாட்டம், பின்னல் கோலாட்டம், சக்கைக் குச்சி, என அதிகம் பிரபலமடையாத சில கலைகளை மேடையில் நேரடியாகக் காட்சிப்படுத்தியது மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தன. பறையாட்டம், ஒயிலாட்டம், கும்மி, கரகாட்டம் முதலியவை மக்களை ஆரவாரத்தோடு தாளம் போட வைத்தன. பிற வட இந்திய கலைகளான கர்பா, பீஹூ ஆகியவற்றோடு சீன, மலாய் மரபுக் கலைஞரும் இந்த அனந்தக் கொண்டாட்ட நிகழ்வில், சங்கமமானது மக்களின் வரவேற்பை பெற்றது.

ஆகஸ்டு 31ஆம் தேதி மாலை நிகழ்வில், இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு ஏற்பாட்டுக்குழுவை வாழ்த்தினார்கள். 2007 முதல் ஆண்டுதோறும் தமிழகத்தில் அவர் தலைமையில் நடைபெற்று வரும் ‘சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா’ நிகழ்வைக்குறிப்பிட்ட அவர், ஆனந்தக் கொண்டாட்டம் நாட்டுப்புறக் கலைகளைப் பேணிக் காப்பதோடு நவீன சமூகத்தில் அவற்றை விழாக் கால நடப்புகளாக நிலை மாற்றும் என நம்பிக்கை தெரிவித்தார்.

அடுத்த நாள் நடைபெற்ற ‘சிங்கப்பூரில் முத்தமிழறிஞர் கலைஞர்’ நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு அந்த நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றிய கனிமொழி கருணாநிதி, ஆனந்தக் கொண்டாட்டத்தைக் குறிப்பிட்டுப் பேசினார். தமிழர் பெருமையும் தமிழுணர்வும் சிங்கப்பூரில் வேர்விட்டுத் துளிர்ப்பதன் அடையாளமாக அக்கலை நிகழ்வு விளங்குவதாக கூறிப் பாராட்டினார். “இம்மண்ணுலகின் மூத்தகுடி தமிழ்க் குடி என்பதற்கு தமிழர்களின் கலைவடிவங்களே சாட்சி. அவை யாவும் உயிர்ப்புடன் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் முன்னெடுப்பே ஆனந்தக் கொண்டாட்டம்,” என்றார் தேசிய மரபுடைமைக் கழகத்தின் தலைமை நிர்வாகியும், ஆனந்தக் கொண்டாட்டம் நிகழ்வின் ஆலோசகருமான ரா. ராஜாராம். அதற்கிணங்க, இந்நிகழ்வை சமூகப் பிணைப்புகளை வலுப்படுத்தும் ஒன்றாகப் பாவித்தார், செம்பவாங் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் விக்ரம் நாயர்.

விழாவில் மதுரையிலிருந்து வந்திருந்த இசை ஆய்வாளர் அறிஞர் முனைவர் மம்மது அவர்களும், கனிமொழி கருணாநிதி அவர்களின் கணவர் அரவிந்தன் அவர்களும், தமிழக அரசின் அயலகத் தமிழர் நலவாரியத்தின் உறுப்பினர் முனைவர் ஜி.வி.இராம், அருமைச் சந்திரன், கவிஞர் இறை.மதியழகன் ஆகியோர் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர்.

கணீர்க் குரலில் அரங்கை அதிரவைத்த, தமிழ் மரபுக் கலைப் பாடல்களில் சில, 300 ஆண்டுகள் பழமையானவை. இந்தியாவைச் சேர்ந்த பால் ஜேக்கப் இசையமைத்து, அவற்றுக்கு மீளுயிர் தந்திருக்கும் இக்கலை நிகழ்வின் வாயிலாக, அப்பொன்னான காலத்துக்கே பார்வையாளர்கள் பயணித்தனர். இப்பாடல்களை ஸ்பாட்டிஃபை, அமேசான் மியூசிக், யூடியூப் மியூசிக், ஆப்பிள் மியூசிக், ஜியோசாவன் ஆகிய தளங்களின் மூலம் மக்கள் கேட்டு மகிழலாம், பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

“அடுத்த தலைமுறையினர் நமது கலாசார வேர்களைப் போற்றித் தழுவி, அதன் மகத்துவத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதே எங்களின் நம்பிக்கை. ஆனந்தக் கொண்டாட்டத்தைத் தாண்டி, மரபுக் கலைகளை மக்களிடையே வளர்க்க உழைத்துக்கொண்டிருக்கிறோம்,” என்றார், மறைந்த உள்ளூர் கலைஞர் திரு ஆனந்த கண்ணனின் நினைவாக கடந்தாண்டு உருவாக்கப்பட்ட ஆனந்தா, மரபுக் கலைகள் கூடத்தின் நிறுவனர் ஜாஃப்பிர் கோபி, கண்ணன்.

பரபரப்பான நவீனச் சூழல் மலிந்துள்ள சிங்கப்பூரில், நலிந்துவரும் தமிழ் மரபிசைக் கலைகள்வழி மண்வாசனை வீசுவது, இளையரின் தமிழ் அடையாளத்தை வலுப்படுத்தத் துணை நிற்கிறது. நம் பாரம்பரியத்தை ஆழப் புரிந்து கொள்ளவும், அதில் பங்கெடுத்துப் பயன்பெறவும் வாய்ப்பளிப்பதோடு, கலையுணர்வும் மொழிக் கடப்பாடும் மிகுந்த தமிழர்களாக, அவர்களை வளர்த்தெடுக்கும் முனைப்பு ஏற்பாட்டாளர்களிடையே மேலோங்குகிறது.

சிங்கப்பூரில் முதல் முறையாக பெருந்திரள் கோலாட்ட நடனத்தையும் (*Largest Mass Kolaattam Dance*) இந்தியப் பாரம்பரிய நாட்டுப்புற தாளவாத்தியங்களின் ஆகப் பெரிய கலவையையும் (*Largest Medley of Indian Traditional Folk Percussions*) படைத்து கடந்த ஜூலை 13ஆம் தேதி, சிங்கப்பூர் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றது ஆனந்தா மரபுக் கலைகள் கூடம். மாணவர்களுக்கு மரபுக் கலைகளைக் கொண்டு சென்ற ‘நம் மரபு’ வகுப்புகளையும் இக்குழு ஒருங்கிணைத்தது. தொடர்ந்து இத்தகைய முன்னெடுப்புகளை இளையரைக் கருத்தில் கொண்டு வடிவமைப்பதில் குழு உறுதியாக உள்ளது.

## அமெரிக்காவில் பெறப்பட்ட முதலீடுகள் குறித்து

# முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை திரும்பியதும் விவரிப்பார்!

### எடப்பாடி பழனிச்சாமிக்குப் பதிலளித்து - அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!



நெல்லை, செப். 10 -

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் வண்ணார்பேட்டை அப்ஃனா பார்க்கில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் பங்கேற்ற கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றுள்ளார் என எடப்பாடி பழனிச்சாமி சொல்கிறார். சிக்காகோவில் முதலமைச்சர் அவர்கள் சைக்கிள் ஓட்டுகிறார். அதேபோல் அமெரிக்காவில் தினமும் நடக்கும் முதலமைச்சர் அவர்களின் நிகழ்வுகள் அனைத்தும் ஊடகங்களில் வெளியாகி வருகிறது. எடப்பாடி பழனிச்சாமி அதனை எல்லாம் பார்க்கவில்லையா? எடப்பாடி பழனிச்சாமிக்கு கண் குருடு போல தெரிகிறது. எடப்பாடி பழனிச்சாமியுடன் இருந்தவர்கள் தன்னைவிட்டுச் சென்றுவிடுவார்கள் என்ற பதற்றம், சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. அதனால் என்ன பேச வேண்டும் என்று தெரியாமல் அவர் பேசி வருகிறார்.

முதலமைச்சர் அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். அவரது அன்றாட அமெரிக்க நிகழ்வுகளை அனைவரும் பார்த்து வருகின்றனர்.

அமெரிக்கா சென்றுள்ள முதல்வர் அவர்கள் திரும்பியவுடன் ஊடகங்களை சந்தித்து முதலீடுகள் தொடர்பாக பேசுவார். எதனையும் மூடி மறைக்கும் பழக்கம் தி.மு.க.வுக்கு கிடையாது.

தி.மு.க.மீது எதிர்க்கட்சிகள் சட்டம் ஒழுங்கு சரியில்லை, பாலியல் குற்றச்சாட்டுகள் என அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் வழக்கமான ஒன்றுதான். மணிப்பூர், உத்திரபிரதேசம், குஜராத் மாநிலத்தில் உள்ள சம்பவங்களைவிட தமிழகத்தில் பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை. அ.தி.மு.க. ஆட்சியை விட தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளது என தேசிய குற்ற ஆவண காப்பகம் அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் போட்டிகள் நடத்தி கஜானாவை காலி செய்ததாக எடப்பாடி பழனிச்சாமி சொல்வது தவறானது. ஆனால் ஆசியாலேயே முதல்முறையாக தமிழகத்தை திரும்பிப் பார்க்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். இவர்களது ஆட்சியில் இதுபோன்று நடத்த முடியவில்லை என்ற வயிற்றெரிச்சலில் இவ்வாறு பேசுகிறார். தி.மு.க. கூட்டணி தொடர்ந்து நீடிக்கும்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தெரிவித்தார்.

## அறிவியல்பூர்வமாக வளர்ந்துக் கொண்டு இருக்கும் நிலையில்

# மூடநம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டு செயல்பட வேண்டாம்!

### காஞ்சிபுரத்தில் தயாநிதி மாறன் எம்.பி. பேட்டி!



சென்னை, செப். 10-

அறிவியல் பூர்வமாக வளர்ந்துக் கொண்டு இருக்கும் நிலையில், மூட நம்பிக்கைகளை வளர்த்து கொண்டு செயல்பட வேண்டாம் என தயாநிதி மாறன் எம்.பி. கூறினார்.

**விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டலக் கூட்டம்!**

காஞ்சிபுரம் அருகே காரப்பேட்டை உள்ள நட்சத்திர ஓட்டலில் தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டல அளவிலான கலந்துரையாடல் கூட்டம் நடந்தது.

இதில், சிறப்பு அழைப்பாளராக தி.மு.க. மாநில விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான தயாநிதி மாறன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி பேசினார்.

கூட்டத்தில், காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். பின்னர், மண்டல அளவில் பங்கேற்ற அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கு நினைவு பரிசுகளையும் வழங்கினர்.

இதன் பின்பு செய்தியாளர்களை சந்தித்த அணியின் செயலாளரும், நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி. கூறுகையில்,

‘விளையாட்டு மேம்பாட்டு அணி ஆரம்பித்து 20 மாதங்களில் தமிழகம் முழுவதும் சுமார் 180 விளையாட்டு போட்டிகளை நடத்தியுள்ளோம். அதிகளவில் கபடி, கிரிக்கெட் மற்றும் நீச்சல் போட்டிகளை நடத்தியுள்ளோம். அதிலும், சிறப்பாக ரோபோ போட்டியும் நடத்தியுள்ளோம்.

மேலும், வருகின்ற ஆண்டுகளில் ஒரு மாதத்திற்கு சுமார் 20 போட்டிகள் நடத்த திட்டமிட்டுள்ளோம். அறிவியல் பூர்வமாக வளர்ந்து கொண்டு இருக்கும் நிலையில் மூட நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டு செயல்பட வேண்டாம்’ என்றார்.

பேட்டியின்போது, மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் ராதா கிருஷ்ணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.